செ. கு. எண்:037 நாள் :12.07.2015

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின்**

**அறிக்கை – 12.7.2015**

24.4.2015 அன்று திருநெல்வேலி மாவட்டம், வீரகேரளம்புதூர் வட்டம், குலையனேரி கிராமத்தைச் சேர்ந்த திரு. தங்கையா என்பவரின் மனைவி திருமதி குருவம்மாள்;

27.4.2015 அன்று திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி வட்டம், எழிலூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. பொன்னுசாமி என்பவரின் மகன் திரு. வெள்ளைச்சாமி;

கடலூர் மாவட்டம், திட்டக்குடி வட்டம், போத்திரமங்கலம் மேற்கு கிராமத்தைச் சேர்ந்த திரு. செல்லமுத்து என்பவரின் மகன் மாயவேல்;

இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் வட்டம், ஏ.நெடுங்குளம் கிராமத்தைச் சேர்ந்த திரு. பச்சைமால் என்பவரின் மனைவி திருமதி இந்திரா, திரு. தேவராஜ் என்பவரின் மனைவி திருமதி அனுராதா;

3.5.2015 அன்று புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் வட்டம், வத்தனாகோட்டை கிராமத்தைச் சேர்ந்த திரு. பழனிவேல் என்பவரின் மனைவி திருமதி கலைமணி;

–– ஆகியோர் இடி, மின்னல் தாக்கியதால் உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த துயர சம்பவங்களில் அகால மரணமடைந்தவர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துயரச் சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**